நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ), செங்கல்பட்டு மண்டலம்
அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை : திரு. V.M. ராஜேந்திரன், பி.இ.,

ந.க.எண். 5181/17 செம3

நாள் : 25.01.18

பொருள் : அனுமதியற்ற மனைப்பிரிவுகள் வரன்முறைப்படுத்துதல் திட்டம் 2017 - நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகம், செங்கல்பட்டு மண்டலம், செங்கல்பட்டு – காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் வட்டம், குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம், மணிமங்கலம் ஊராட்சி/கிராமம், ச.எண்கள். 487/1B1, 1B2; 492; 499/1-ல் பரப்பு 1.95 ஏக்கர் இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவினை வரன்முறைப்படுத்தி கொள்கை அளவிலான மனைப்பிரிவு ஒப்புதல் வழங்குதல் - தொடர்பாக.

பார்வை : 1. அரசாணை (நிலை) எண். 78, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை ந.வ.4(3) நாள் : 04.05.17
2. அரசாணை (நிலை) எண். 172, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை ந.வ.4(3) நாள் : 13.10.17
3. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை-2 அவர்களின் வழிகாட்டி நெறிமுறை ந.க.எண்.13193/2017/LA2 நாள் : 30.10.2017, 31.10.17, 07.11.17, 17.11.2017 (ம) 20.12.2017
4. மனுதாரர் திரு. S. ஞானசேகரன் அவர்கள் விண்ணப்பம் நாள் : 02.11.17

---

உத்தரவு :

பார்வை(1) மற்றும் (2)-ல் கண்ட அரசாணையின்படியும் பார்வை (3)-ல் கண்ட வழிகாட்டி நெறிமுறைகளின்படியும் பார்வை(4)-ல் கண்ட கடிதத்துடன் பெறப்பட்ட உத்தேசம் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்காணும் உத்தரவு வழங்கப்படுகிறது.

காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் வட்டம், குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம், மணிமங்கலம் ஊராட்சி/கிராமம், ச.எண்கள். 487/1B1, 1B2; 492; 499/1-ல் பரப்பு 1.95 ஏக்கர் இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவினை வரன்முறைப்படுத்தி இம்மனைப்பிரிவிற்கு ம.வ./ந.ஊ.து.இ(செம) எண். 62(R)/2018 என எண்ணிடப்பட்டு கீழ்காணும் நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான மனைப்பிரிவு ஒப்புதல் (in-principle approval) வழங்கப்படுகிறது.

| | |
|---|---|
| மனைப்பிரிவின் மொத்த பரப்பு | – 1.95 ஏக்கர் (அ) 84942 ச.அடி |
| மொத்த மனைகள் | – 47 (1, 1A, 2, 2A, 3, 4, 4A, 5-44) |
| திறந்தவெளி ஒதுக்கீடு (OSR) இடம் : – | |
| OSR 1 – 3170 ச.அடி | 6807 ச.அடி |
| OSR 2 – 3637 ச.அடி | |

பரிசீலனைக்கட்டணம் மனை ஒன்றுக்கு ரு. 500/- வீதம் அனைத்து மனைகளுக்கும் பெறப்பட்டுள்ளது.

<u>செலுத்தப்பட வேண்டிய கட்டண விபரங்கள் :-</u>

1. வரன்முறைப்படுத்துதல் கட்டணம் ஒவ்வொரு மனைபரப்பிற்கேற்ப ஒரு சதுர மீட்டருக்கு ரூ.30/- வீதம் கீழ்க்கண்ட அரசு கணக்கில் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், செங்கல்பட்டு மண்டல அலுவலகத்தில் கீழ்க்காணும் தலைப்பினை ஊர்ஜிதம் செய்தபின் கருவூலத்தில் தொகை செலுத்தப்பட வேண்டும்.

   **<u>Regularisation Charges Head of Acctount :</u>**

   0217 Urban Development - 60 other Urban Development Schemes -
   800 Other receipts AT Receipts under Regularisation Charges of
   Unapproved layout and Plots - DTCP
   (DPC: 0217 60 800 AT 0007)

2. வளர்ச்சிக் கட்டணம் ஒவ்வொரு மனைப்பரப்பிற்கேற்ப ஒரு சதுர மீட்டருக்கு ரூ.25/- வீதம் உள்ளாட்சியின் தனிக்கணக்கில் பெற்ற பின்னரே இம்மனைப்பிரிவில் அமையும் ஒவ்வொரு மனைக்கும் தனித்தனியாக உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

3. அரசாணை (நிலை) எண். 172, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை ந.வ.4(3) நாள் : 13.10.17-ன்படி மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளவாறு சாலைகள் (ம) திறந்தவெளி ஒதுக்கீடு (OSR) இடங்கள் சம்பந்தப்பட்ட உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டதாக கருதப்படும்.

4. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் (ம) பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் (அ) மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட கொள்கை அளவிலான ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.

மேற்காணும் கட்டணங்களை செலுத்திய பின்னரே சம்மந்தப்பட்ட மனைகளுக்கு அனுமதியளிக்கப்பட வேண்டும்.

ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் இரண்டு மேல் நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

25.1.18

நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர் (பொ),
செங்கல்பட்டு.

25/1/18 25/1/18

இணைப்பு : மனைப்பிரிவு வரைபடம் இரண்டு

பெறுநர் : வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.),
குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம்,
திருப்பெரும்புதூர் வட்டம்,
காஞ்சிபுரம் மாவட்டம்.

நகல் : 1. திரு. S. ஞானசேகரன்
15, பெரியார் நகர் 4வது குறுக்குத்தெரு,
இரும்புலியூர்,
மேற்கு தாம்பரம்,
சென்னை - 600 045.

2. நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர்,
செங்கல்பட்டு மண்டலம்.

3. நகர் ஊரமைப்பு ஆணையர்,
807, அண்ணா சாலை, சென்னை – 02.

4. கணக்குப்பிரிவு – செங்கல்பட்டு மண்டலம்.

5. உதவி இயக்குநர் (நில அளவை)
மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்,
காஞ்சிபுரம்.

6. வட்டாட்சியர்,
திருப்பெரும்புதூர் வட்டம்,
காஞ்சிபுரம் மாவட்டம்.

} சாலைகள் பகுதியினை உட்பிரிவு செய்து உள்ளாட்சி பெயரில் மாற்றம் செய்யும் பொருட்டு.

7. சார்பதிவாளர்,
சார்பதிவாளர் அலுவலகம்,
படப்பை.

} சாலைகள் பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் பதிவு செய்யும் பொருட்டு.

(19)

மணிமங்கலம் ஊராட்சி தனி அலுவலர்/வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)
அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை:-திரு.பா.மணிமாறன்

ந.க.எண்.565/2018/அ1 நாள். .04.2018

பொருள் : காஞ்சிபுரம் மாவட்டம் - திருபெரும்புதூர் வட்டம் - குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம் -மணிமங்கலம்ஊராட்சி - கிராம சர்வே எண்.487/1B1, 1B2, 492, 499/1ல்1.95 ஏக்கர் இடத்தில் அமைந்த அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவினை வரன்முறைப்படுத்தி, 44மனைக்கு மட்டும் ஒப்புதல் அளித்து உத்திரவிடுதல் - சார்ந்து.

பார்வை : 1.அரசாணை (நிலை) எண்.78 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வசதித்துறை.ந.வ.4(3) நாள்.04.05.2017
2. அரசாணை (நிலை) எண்.172 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வசதித்துறை.ந.வ.4(3) நாள்.13.10.2017
3.நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ) செங்கல்பட்டு மண்டலம் அவர்களின்
ந.க.எண்.5181/2017.செம3.நாள்.25.01.2018
4.சம்மந்தப்பட்ட ஆவணங்கள்

*******

<u>உத்தரவு :-</u>

பார்வை 1(ம) 2 ல் கண்ட அரசாணைகள் மற்றும் பார்வை -3- ல் காணும் நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர் (பொ) செங்கல்பட்டு மண்டலம் அவர்களின் உத்தரவின்படி, அனுமதியற்ற மனைப்பிரிவு வரன்முறைப்படுத்துதல் திட்டம் 2017 விதி 2(2) பிரிவு (i)(d)ன்படி காஞ்சிபுரம் மாவட்டம் , திருபெரும்புதூர் வட்டம், குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம் மணிமங்கலம்ஊராட்சி - கிராம சர்வே எண்.487/1B1, 1B2, 492, 499/1 ல்1.95 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளஅனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவினை பார்வை-3-ல் கண்டுள்ள வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள இம்மனைப்பிரிவில் அமைந்த மனை எண்கள்.(1-44) ஆகிய 44 மனைக்கு மட்டும் வளர்ச்சி கட்டணம் மற்றும் வரன்முறைப்படுத்துதல் கட்டணங்கள் செலுத்தப்பட்டுள்ளது. மேற்படி 44 மனைக்கு மட்டும் வரன்முறை செய்யப்பட்டு ஒப்புதல் அளித்து உத்திரவிடப்படுகிறது.

ஒ/- (கையொப்பம்)
தனி அலுவலர்/ வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)
குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம்
(இ)/படப்பை

பெறுநர் :-
திரு.S.ஞானசேகரன்,
எண்.15பெரியார் தெரு,
இரும்புலியூர், மேற்கு தாம்பரம்
சென்னை - 45

நகல் :-
நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ),
செங்கல்பட்டு மண்டலம்,
செங்கல்பட்டு - 600001
நகல் - ஊராட்சி செயலர்/ பதிவேட்டில் பதிந்து வைக்க

ஒ/- 30/4/18
30/4/18